[1st April 1963

(இ) அங்கு டாக்டர் குடியிருப்பு இல்லமும், மருத்துவ மனையும் பழுதுபட்டு கிடப்பது உண்மையா?

(உ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a), (b) & (c): Government understand that the post of Medical Officer of the dispensary is vacant since 2nd March 1962. It is for the Panchayat Union Council to take necessary action in the matter.

மருத்துவ மனைகளில் பொது நூல்நிலையம்

*466 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் மருத்துவ நிலையத்தில் ஏற்படுத்தியிருப்பது போல சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் உள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் பொது நூல்நிலையம் நிறுவப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்தந்த ஸ்தல நூலக அதிகார சபைகள் ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகர அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்துவதைக் குறித்து கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அதுவாயிருந்தால், செங்கற்பட்டு ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதகை தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்றை ஏற்படுத்த விரைவில் அனுமதி வழங்கப்படும். மருத்துவத் துறை டைரக்டர் இது விஷயமாய் திட்டங்கள் அனுப்பும்போது ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகரிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்த இதைப்போலவே அனுமதி வழங்கப்படும்.

It is presumed that the Honourable Member refers to the opening of libraries in District Headquarters and City State Hospitals by the Local Library Authorities concerned. If so, a library has been established in the District Headquarters Hospital at Chingleput. Permission for the opening of a library in the Headquarters Hospital, Ootacamund, will be accorded shortly. Similar permission will be granted in respect of other District Headquarters and City State Hospitals as and when proposals in that regard are received from the Director of Medical Services.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, நூலைப் படிப்பது ஆளுக்கு நோயை மறந்திருக்கிற நிலையை உண்டாக்கும். நூல் நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்துவதோடு, எழுந்து போக முடியாத நிலையில் நூலகத்திற்குச் சென்று வேண்டிய நூல்களை எடுத்துவரமுடியாத நிலையில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு நூலகங்கள் அவர்கள் படுக்கைக்குச் சென்று கொடுக்கும் முறையில் வழி வகுப்பார்களா?

1st April 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும்.

Medical and Engineering Courses

* 469 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the several changes proposed to be introduced in the Medical and Engineering courses of studies to meet the needs of the National Emergency ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதிய மருத்துவப் படிப்பு (Integrated M.B.B.S. Course) சம்பந்தப்பட்டவரை சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது. புதிய இன்ஜினீயரிங் படிப்பு பற்றிய விவரங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

குடி தண்ணீர்த் திட்டம் (கள்ளக்குறிச்சி)

* 470 கேள்வி.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி நகர குடி தண்ணீர்த் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRIMATHI JOHTHI VENCATACHELLUM : The Government have recently received the outline proposals for the Kallakurichi water-supply scheme from the Chief Engineer (Public Health Engineering and Municipal Works). The question of sanctioning the scheme is under consideration.

Rural dispensary (Hosur taluk)

* 473 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have received any representation from the erstwhile Salem District Board to open a Rural Dispensary at Nammandahally village in Hosur taluk; and

(b) if so, the action taken thereon ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இந்த ப்ரொபோஸலானது அனுப்பப்பட்டு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருந்தால் அதைப் பரிசீலனைக்கு எடுத்து ஆவன செய்ய முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதை முதலிலே பஞ்சாயத்து போர்டிலே திறக்கவேண்டுமென்று டிஸைட் செய்தார்கள். மறுபடியும் ப்ரைமரி ஹெல்த் சென்டர் தான் திறக்கவேண்டும், ரூரல் டிஸ்பென்ஸரி வேண்டாம் என்று சொன்னார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர் திறக்கவேண்டுமென்றால், தற்போது அவசர

a Printed as Appendix V on pages 489–490 infra.